International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 06 Issue: 04 October to December 2024 www.irjtsjournal.org

# இனியவை நாற்பதில் கல்விச் சிந்தனைகள்

**மு.முவின்,**

**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**

**ஆர்விஎஸ்கலைஅறிவியல்கல்லூரி, கோவை** - *641402,*

**தமிழ்நாடு, இந்தியா**

**ஆய்வுச்சுருக்கம்** :

ஆதிமனிதன் கற்காலத்தில் தன்னிடம் இல்லாத அறிவை, அன்றையசூழலில் தன்னிலும் அறிவிற்சிறந்த பறவையிடமிருந்தோ அல்லது விலங்கிடமிருந்தோ ஏதோ ஒன்றைக் கற்றிருக்க வேண்டும். ஏனெனில் முதன் முதலில் பூமியில் பிறந்த மனிதர்கள் அறிவிற்சிறந்தவர்களாக இருந்திருக்க இயலாது. உதாரணமாக பறவைகள் அங்கும் இங்கும் பறந்து இரைதேடி இறுதியில் தேடிய இரையை உண்பதை மனிதன் கண்டிருப்பான். விலங்குகள் பசியில் தன்னிலும் எளிய விலங்கைக் கொன்று உண்பதைக் கண்டிருப்பான். இவ்வாறு தனக்கும் உணவு தேவைப்படும் போது, தானும்மரங்களில், செடிகளில் கிடைக்கும் பழங்களையும், காய்களையும், சில நேரங்களில் விலங்குகளை வேட்டையாடியும் உண்ண வேண்டும் என்றெண்ணி பறவைகள் மற்றும் விலங்குகளைப் போல உண்ணத் தொடங்கியிருக்க வேண்டும். இப்படி உண்ணக்கற்றுக் கொண்ட மனிதன், சில விலங்குகள் குகைகளிலும், பறவைகள் கூடுகளிலும் வாழ்வதைக்கண்டு, இருப்பிடம் அமைத்து வாழ வேண்டும் என்ற அடுத்தகட்ட அறிவையும் பறவைகள் மற்றும் விலங்குகளிடமிருந்தே பெற்றிருக்கக்கூடும். இவ்வாறு தன்னிடம் இல்லாத அறிவைதன்னிலும் அறிவிற்சிறந்த பிற உயிரினங்களிடமிருந்து அல்லது சான்றோரிட மிருந்துதானேகற்றுக் கொள்வதும், தன்னிட முள்ள அறிவை ஆர்வமுள்ளவர்க்கும், தேவையுள்ளோருக்கும் கற்றுக் கொடுப்பதும் கல்வி எனப்படுகிறது. முன்னோர்கள் வாழ்ந்த ஆற்றங்கரைநாகரீகங்களில் கண்டெடுக்கப் படும்பானை ஓடுகளில் தங்களது பெயர்களைப் பொறித்து வைத்ததிலும், குறிப்பிட்ட இடத்திற்கு வந்ததைக் அடையாளமாகக் குறிப்பதற்காகவோ அல்லது குறிப்பிட்ட பகுதிகளில் சில விலங்குகளின் நடமாட்டத்தைக் குறிப்பதற்காகவோ குகைகளில் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளதிலும், கல்வெட்டுக்களிலும், பனையோலைகளிலும் தொடங்கிய கல்வியறிவு இன்று கணினிகள் நிறைந்த இணையயுகத்திற்கு வந்துள்ளது. மனிதனிடம் கல்வியும், கற்பனையும்



© 2024, IRJTSR

இருக்கும்வரை, இன்னும் அறிவியல் நுட்பங்கள் வளர்ந்து கொண்டே செல்லும். இன்றுநாம் இணையயுகத்தில் வாழும் நிலையில், அறம் உரைக்க எழுதப்பட்ட பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகத்திகழும் பூதஞ்சேந்தனார் இயற்றிய இனியவைநாற்பதில், இடம் பெற்றுள்ள கல்வியியல் சிந்தனைகளை ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**குறிச்சொற்கள்** : கல்வி, மனிதன், அறம், கற்றல், கற்பித்தல், அறிவு

**முன்னுரை** :

மனிதன் சுதந்திர முள்ளவனாக வாழவும், தானேதன்சுய அறிவால் தனக்கான வாழ்வைக் கட்டமைத்துக் கொள்வதற்கும் கல்வி அவசியமாகிறது. கல்வி கற்றல் என்பது பொது வாககுலக்கல்வி என்றே அறியப் பட்டுவந்தது. அதன் விளைவாக அந்தந்தக்குலத்தின் தலை முறையினருக்கு மட்டுமே கல்வியானது பயிற்று விக்கப்பட்டும் வந்தது. உதாரணமாக, மந்திரங்கள் பயில்தல் தொடங்கிபானை செய்தல் வரையாவும் குலக்கல்வியாக இருந்தது. இதன் பின்னர் மக்களுக்கு எழுதப்படிக்கத் தெரிந்த அறிவாக, அவரவர் தாய்மொழி பற்றிய மொழியறிவானது அன்றாட வாழ்க்கைக்கு அவசியம் என்றாகியது. அதனையடுத்த பொதுவான கல்வியறிவானது அறிவியல், கணிதம், வரலாறு என வளர்ந்து நெறிமுறைகளுடன் கூடிய கல்விக் கொள்கையாக வளர்ந்தது. கல்விக்குப் பெண்ணை தெய்வமாக வைத்து வணங்கும் சமூகத்தில், பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கல்வி மறுக்கப்பட்டதிலிருந்து, யாவரையும் அறிவால் முன்னேற்றுதல் என்ற கல்வியின் நோக்கம் தொடக்க காலத்தில் சிதைந்திருந்தது எனலாம். ஆனால் இன்று அனைவருக்கும் கல்வி என்ற நிலை உருவாகியுள்ளது. அதன் விளைவாய் அறிவுத்தளத்தில் உலகம் எண்ணற்ற சாதனைகளைக் கண்டுள்ளது. இக்கட்டுரை, இன்றைய இணைய உலகில் செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பமானது ஆக்கிரமித்துவரும் நிலையில், தமிழ் அற இலக்கியங்களில் ஒன்றான இனியவைநாற்பதில் கல்வி பற்றிய சிந்தனைகள் இடம் பெற்றுள்ளதை ஆராய்கிறது.

**இனியவைநாற்பது எனும் அறநூல்** :

அறம் மனிதனாய்ப் பிறந்தயாவர்க்கும் இருக்க வேண்டிய ஒன்றாகும். கருணை என்பது அறத்தின் அடிப்படைவேராக இருக்கிறது. ஏனெனில் கருணையற்ற ஒருவனால் அறச்சிந்தனையோடு இருக்க இயலாது. அறம் பிறழ்ந்த நிகழ்வுகள் சமூகத்தில் அதிகம் நிகழும் போது, சமூகத்தின் அமைதி சீர்குலைகிறது. நுட்பமாக சிந்தித்துப் பார்த்தால், போர் போன்ற நாடுகளுக்கு இடையேயான மிகப்பெரும்

சண்டைகளுக்குக் காரணம்யாரோ ஓர் அறமற்ற தனிமனிதனின் சிந்தனையில் ஏற்பட்டதடு மாற்றமாக இருக்கலாம். அத்தகைய அறத்தைப் பற்றிய கூற்றுபின் வருமாறு,

**“ அந்தந்த இயல்புகளினின்று மாறுபட்டு நிற்கும் பொருள்களின் இயக்க நிலையை அதனதன் இயல்புநிலைக்கே மீண்டும் கொண்டுவருதலே அறம் எனப்படுகிறது. “**

**( மாதவன்சு, தமிழ் அற இலக்கியங்களும் பௌத்தசமண அறங்களும், ப 100 )**

இக்கூற்றானது, மனிதன் இயல்பில் அன்பு நிறைந்தவன், அவன்தன் இயல்பு நிலையிலிருந்து மாறிச் செல்லும் போது, மீண்டும் அவனை அற நிலைக்குக் கொண்டு செல்வதே அறம் என்பதைப் பதிவு செய்கிறது. மனித வாழ்விற்கு இனிமையைத் தரும் அறக்கருத்துக் களை நாற்பதுபாடல்களில் வலியுறுத்துவதால் இனியவைநாற்பது எனப்பெயர் பெற்றது. இதன் ஆசிரியர் - பூதஞ்சேந்தனார் ஆவார்.

இந்நூலின் கடவுள் வாழ்த்தில், கண் மூன்றுடையான் என்று சிவபெருமானும், துழாய்மாலையான் என்று திருமாலும், முகம் நான்குடையான் என்று பிரம்மனும் போற்றப்பட்டுள்ளனர். இதன் படி நோக்கின், இந்நூல் சமணசமயம் சார்ந்த அறநூல் அல்ல என்பது தெளிவு படுகிறது.

**கல்வியின் முக்கியத்துவம்** :

எல்லாக் காலங்களிலும் உயர்ந்த ஒன்றாகக் கருதப்பட்டு வருவது கல்வியாகும். கல்விகற்றோரால் பெருமை பெற்றுள்ளது. கற்றோர் கல்வியால் மதிக்கப்பட்டுள்ளனர். மற்றோர் கல்வியறிவு இல்லாத காரணத்தால் சிறுமை படுத்தப்பட்டுள்ளனர். இதற்குவலு சேர்க்கும் விதமாய், திருக்குறளில் கல்வி எனும் அதிகாரத்தில் கல்லாரைச் சிறுமைபடுத்தும் நோக்கில்குறள் இடம் பெற்றுள்ளது. அக்குறள் பின்வருமாறு,

‘ **கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**

**புண்ணுடையோர் கல்லாதவர்** ’

**( ஹெலினாதே, திருக்குறள் புதிய உரை, ப 87 )**

இக்குறளில், கல்வியறிவு இல்லாதார் முகத்தில் இருப்பவை கண்கள் அல்ல, இரண்டு புண்கள் என்று கல்லாதோரைவிமர்சித்து, கல்வியின் முக்கியத்துவத்தை விளக்குகிறார் வள்ளுவர்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR 

பள்ளியோ, கல்லூரியோ சென்றால் தான் கல்வியறிவைப் பெற முடியும் என்பதல்ல. ஆர்வமும், முயற்சியும் இருந்தால் கல்வியையார் வேண்டு மானாலும், எங்கு வேண்டு மானாலும் கற்க இயலும். அதனால் சிறப்பும் பெற முடியும் என்பதனை, “ **கல்வி என்பது கட்டடங்களுக்குள் பெறப்படுவதல்ல. வாழ்க்கையை எந்தவிதமான மனத்தயாரிப்பு மின்றி எதிர்கொள்கிற போதுதான் அது நிகழ்கிறது. சுயமாகப் படித்தும், தேடியும், உணர்ந்தும், அறிவை விரிவு செய்து கொள்ள முடியும்.” ( இறையன்புவெ, வையத்தலைமை கொள், ப.231** ) என்றவெ. இறையன்பு அவர்களின் கல்வி பற்றிய கருத்து நிறுவுகிறது.

**கற்றலும் கைகொடுத்தலும்** :

இனியவைநாற்பது எனும் அறநூலானது, நாற்பதுபாடல்களில் பத்து இடங்களில் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசுகிறது. இனியவைநாற்பது நூலின் முதல்பாடலின் முதல் இரண்டுவரிகளும் கல்வியின் பயனைக் கூறுகின்றன. அவை பின்வருமாறு,

‘ **பிச்சைப் புக்காயினுங் கற்றல் மிகவினிதே**

**நற்சவையிற்கை கொடுத்தல் சாலவு முன்னினிதே** ‘

( வேங்கடசாமி நாட்டார். நமு, இன்னாநாற்பது இனியவைநாற்பது மூஉ, ப 48 )

மேற்குறிப்பிட்டுள்ள பாடல்வரிகள், பிச்சையெடுத்துண்டாயினும் கற்பனவற்றைக் கற்கவேண்டும் என்றும், அவ்வாறு கற்ற கல்வி நற்சபையில் மறந்து விடாமல்கை கொடுத்தல் மிகவும் இனிது என்றும் கூறுகின்றன. இதை ஒத்த கருத்தை வெற்றி வேற்கை என்ற அறநூலில் அதன் ஆசிரியர் அதிவீரராமபாண்டியன்,

“ **கற்கை நன்றே கற்கை நன்றே** !

**பிச்சைப்புகினும் கற்கை நன்றே** ”

( சுப்ரமணியசர் மா, வெற்றி வேற்கை, ப. 41 )

என்று கற்பது நல்லது அத்தகைய கற்றலை பிச்சை எடுத்தாவது மேற் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறார். இங்கே வெளிப்படையாக பிச்சை என்ற சொல் தரும் பொருள், வீடு வீடாகச் சென்று பிச்சையெடுப்பது. ஆனால், கல்வியறிவு பெற வேண்டும் என்ற நோக்கம் கொண்ட ஒருவரால், வீடுவீடாகச் சென்று பிச்சையெடுப்பது என்பது இயலாத ஒன்று. மேலும், இன்று போல் கல்வி ஒரு வணிகமாக இல்லாத அன்றைய காலகட்டத்தில், இன்று கல்வி


© 2024, IRJTSR

நிலையங்களில் வாங்கப்படும் கல்விக் கானகட்டணம் ஏதும் வாங்கப்படாத சூழலில் ஏன் ஒருவன் பிச்சையெடுத்துக் கல்வி கற்க வேண்டும் என்ற வினா எழுகிறது. ஆதலால் இக்கருத்தினை நுணுகிஆராயின், கல்விச் செல்வம் உள்ளவரிடம் எவ்வளவு கெஞ்சியும், அதாவது ஐயா, அம்மா எப்படியேனும் அறிவைக் கற்றுத்தாருங்கள் என்று இரந்து கேட்பதையே பிச்சை என்று சொல்வதாக உணர முடிகிறது

" **நாளும் நவை போகான் கற்றல் மிக இனிதே**" ( வேங்கடசாமி நாட்டார் நமு, இன்னாநாற்பது இனியவைநாற்பது மூஉ, ப 49 ) எனும் வரி, குற்றம் தரும் செயல்களுக்குச் செல்லாதவனாய் நாள் தோறும் கற்க வேண்டும் என்கிறது.

" **கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே** " (வேங்கடசாமி நாட்டார். நமு, இன்னாநாற்பது இனியவைநாற்பது மூஉ, ப 57) எனும் வரியானது, சபைக்கு அஞ்சாதவனின் கல்வி இனியது என்கிறது. மேடையில் ஏறினாலேபயமும், கூட்டத்ததைப் பார்த்தவுடனே வரும் பதட்டமும் கல்விக்கு அழகல்ல என்கிறது.

" **கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே**

**மிக்காரைச் சேர்தல்மிக மாணமுன் இனிதே** " (வேங்கடசாமி நாட்டார். நமு, ப. 60 ) எனும்பாடலின் வரிகள் , கல்வியைக் கற்றார் முன்பு உரைத்தல் இனிது என்றும், அறிவு மிக்காரைச் சேர்தல்மிக இனிது என்றும் கூறுகிறது.

" **புலவர்தம் வாய்மொழி போற்றல் இனிதே** "

( வேங்கடசாமி நாட்டார். நமு, இன்னாநாற்பது இனியவைநாற்பது மூஉ, ப 63 ) எனும்வரி, அறிவுடையாரது வாய்ச்சொற்களைப் பாதுகாத்துக் கொள்ளல் இனிது என்கிறது.

" **சொல்லுங்கால் சோர் வின்றிச் சொல்லுதல் மாண்பினிதே** "

( வேங்கடசாமி நாட்டார். நமு, இன்னா நாற்பது இனியவைநாற்பது மூஉ, ப 74 ) எனும்வரியானது, தான் கற்றதைச் சொல்லுமிடத்து, மறதியின்றிச் சொல்வதன் மாண்பினைக் கூறுகிறது.

" **கற்றறிந்தார் கூறும் கருமப் பொருள் இனிதே** "

( வேங்கடசாமி நாட்டார். நமு, இன்னாநாற்பது இனியவைநாற்பது மூஉ, ப 73 ) எனும் வரியானது, பல நூல்களைக் கற்று அவற்றை உணர்ந்து அறிந்தவர் கூறும் செயல்களின் பயன் இனிது என்கிறது.

“ **சிறந்த மைந்த கேள்வியராயினும் ஆராய்ந்து**

**அறிந்துரைத்தல் ஆற்ற இனிது** “ ( வேங்கடசாமி நாட்டார். நமு, இன்னாநாற்பது இனியவைநாற்பது மூஉ, ப 72 ) எனும் வரிகள், மிக்க கேள்வியறிவை உடையவராக ஆயினும், ஆராய்ந்தே ஒன்றை உரைக்க வேண்டும் என்கின்றன.

“ **கைவாய்ப் பொருள் பெறினும் கல்லார் கண் தீர்வினிதே** “

( வேங்கடசாமி நாட்டார். நமு, 2011, இன்னாநாற்பது இனியவைநாற்பது மூஉ, ப 67 ) எனும் வரி, கையில் நிற்கக் கூடிய பொருளைப் பெறினும், கல்லாதாரை உடனே விட்டு விடுதல் இனிது என்கிறது.

இனியவைநாற்பதின் முதல் இரண்டுவரிகளைப் போலவே, நூலின் இறுதிப் பாடலின் கடைசி இரண்டுவரிகளும், கல்வியையே இனிது என்று சொல்கின்றன.

அவ்வரிகள் பின் வருமாறு,

‘ **பற்பலநாளும் பழுதின்றிப் பாங்குடைய**

**கற்றலின் காழினியதில்**‘ ( வேங்கடசாமி நாட்டார். நமு, இன்னாநாற்பது இனியவைநாற்பது மூஉ, ப 79 ) எனும் பாடலின் வரிகள், பல நாட்களும், குற்ற மற்ற நூல்களைக் கற்பதைப் போல மிக இனியது எதுவுமில்லை என்கின்றன.

கல்வியைக் கற்றலும், கற்றோர்சபையில் கற்றகல்வியை எடுத்துரைத்தலும், நல்லோர் வாய்மொழி போற்றலும், மிக்க அறிவிலும் ஆராய்ந்து அறிந்து உரைக்க வேண்டிய தன்மையினையும் இனியவைநாற்பது பத்துப்பாடல்களில் கூறுகிறது.

**முடிவுரை** :

கல்வியின் முக்கியத்துவம் பற்றியும், பிச்சையெடுத்தேனும் கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தையும் இனியவைநாற்பது கூறுகிறது. பலருக்கு முன்பு நின்று, கல்வியை எடுத்துரைத்தலில் தான் கல்வியின் இனிமை அடங்கியுள்ளது என்பதை வலியுறுத்துகிறது. மேலும், கல்வி கற்றவன் குற்ற மற்ற வழியில் நடவாது இருத்தலே நன்று என உரைக்கிறது. இனியவைநாற்பதின் முதற்பாடலின் முதல் இரண்டுவரிகளும் கல்வியின் பயனைக் கூறுகின்றன. இனியவைநாற்பதின் முதற்பாடலைப் போலவே, நூலின் இறுதிப் பாடலின் கடைசி இரண்டுவரிகளும், கல்வியையே இனிது என்று வலியுறுத்துகின்றன. இதிலிருந்து பல்வேறு அறங்கள் இருப்பினும், ஒருவனுக்குக் கல்வி எனும் சிந்தனையே இனிது என்ற செய்தி புலனாகிறது.

## துணைநின்றநூல்கள் :

[1] இறையன்பு வெ, இனிக்கும்இளமை, கற்பகம்புத்தகாலயம், சென்னை, 2020

[2] இறையன்பு வெ, வையத்தலைமைகொள், புதியதலை முறை பதிப்பகம், சென்னை, 2014

[3] சுப்ரமணியசர்மா ( உஆ ), வெற்றிவேற்கை, கணபதி அன்கம் பெனி, சென்னை, 1919

[4] மாதவன்சு, தமிழ் அற இலக்கியஙக்ளும் பௌத்தசமண அறங்களும், நியூசெஞ்சரிபுக்ஹவுஸ், சென்னை, 2017

[5] வேங்கடசாமி நாட்டார் நமு, இன்னாநாற்பது இனியவைநாற்பது, மூலமும் உரையும், கௌராபுக் ஏஜென்ஸிஸ், சென்னை, 2011

[6] ஹெலினாதே, திருக்குறள்புதியஉரை,விதைவெளியீடு, ஈரோடு, சென்னை, 2015